1972 சனவரி 28]

* 91 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் ஊராட்சி ஒன்றியம் S.F. No. 98, மண்ணரை கிராமம் கஞ்சம்பாளையத்தில் குட்டை அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

குளித்தலை வட்டத்திலுள்ள சிவாயம் குளம்

* 92 வினா—திரு. பெ. சௌந்திரபாண்டியன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குளித்தலை வட்டம், சிவாயம் குளத்தைப் புதுப்பிக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இத்திட்டம் பரிசீலனையில் இருந்து வருகிறது.

சென்னையில் பாதாள இருப்புப்பாதைகள்

* 93 வினா—திரு. ஏ. சுப்பிரமணியம்,
திரு. சு. துரைசாமி,
திரு. என். கிட்டப்பா

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் பாதாள ரெயில்வே அமைத்திட மத்திய அரசைக் கோரும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. சு. துரைசாமி : அமைச்சர் அவர்கள் இல்லையென்று பதில் சொன்னாலும் சென்னையில் இருக்கிற நெரிசலைப் போக்குகின்ற வகையில் பாதாள இருப்புப் பாதையை அமைக்க நம்முடைய மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தத் திட்டம் தற்போது ரயில்வே இலாகாவால் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

The General Manager, Southern Railway has reported that an organisation headed by the Chief Administrative Officer was set up by the Ministry of Railways to undertake the techno-economic feasibility study of mass rapid transit system in Madras. This organisation has commenced its field work recently and it is in the process of investigation. He has also stated that after the field study has been completed it will be possible to have system selection, viz., whether mass rapid transit system should be underground, elevated or over-surface.